மலைகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்போது கருமாந்துறை, செம்படுகை, மண்ணூர் ஆகிய கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன்: தமிழ்நாடு மின் வாரியம் ரூ 123 லட்சத்தில் பழங்குடி மக்கள் நலவாழ்வுக்காக துணைத்திட்டத்தின் கீழ் இம்மக்கள் வாழும் பகுதிகளுக்கு மின் இணைப்பு தர ஒரு செயற்குறிப்பை அரசுக்கு அனுப்பியது. இதனைப் பரிசீலத்து பின்னர் அதன் முதல் கட்டமாக 1977 ஆம் ஆண்டுக்காக ரூ 10 லட்சம் அரசு மானியமாக வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை நகரில் புதிய சாலை அமைப்பு

*314 வினா: திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணாசாலைக்கு இணையாக மாற்றுச் சாலையொன்று அசோக்நகர், கோடம்பாக்கம் வழியாக அமைக்கும் திட்டம் இப்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: குறிப்பிடப்பட்டுள்ள சாலை அண்ணா சாலைக்கு இணையாக அமைக்கப்படும் சாலை அல்ல. அண்ணா சாலையில் 12·4 கிலோ மீட்டரிலிருந்து பிரிந்து கிண்டி தொழிற்பேட்டை, அசோக் நகர், கோடம்பாக்கம் வழியாகப் பூவிருந்தவல்லி தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து சென்னை திருவள்ளூர் தேசிய நெடுஞ்சாலையில் 11·7 கிலோ மீட்டரில் சேரும் நீளம் வரை போடப்படும் மாற்று வழிச் சாலையாகும். இச்சாலையின் பணி, உலக வங்கித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. இப்பணி, இவ்வாண்டிலேயே துவங்கப்பட்டு படிப்படியாக 1980-க்குள் முடிக்கப்படும்,

திரு. து. புருஷோத்தமன்: தலைவரவர்களே, அண்ணாசாலையில் தற்போது நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி உள்ளது. அதற்கு மாற்றுப் பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மாற்று வழித் திட்டத்தின் அடிப்படையிலேதான் இது அமைக்கப்பட்டு வருகிறது.